Vol. 6, Issue : 01 June - 2022

புதிய அவையம்

ISSN : 2456-821X

========================================================

# சங்க இலக்கியத்தில் சோணை ஆறும் பாடலி ஊரும்

முனைவர் க. மோகன்காந்தி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை.
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.

========================================================

**முன்னுரை**

தமிழர் பண்பாட்டின் ஆணி வேராகத் திகழ்வது சங்க காலமாகும். சங்கப் பண்பாட்டின் நீட்சியை இன்றுவரை தமிழர் வாழ்வியல் தாங்கி நிற்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் உயரிய கொள்கையோடு கடல் கடந்து, நிலப்பரப்புகளைக் கடந்து தமிழர் வாணிகம் செய்தனர். சங்கத் தமிழர் கண்ட ஆறும் ஊரும் இங்குப் பாடுபொருட்களாக அமைகின்றன.

**தமிழர் வாணிகம்**

இந்திய புவியியல் அமைப்பானது மூன்று பக்கம் கடலாலும் ஒரு பக்கம் மலையாலும் சூழப்பெற்றது. இதே கட்டமைப்பைக் கொண்ட ஒரே இந்திய மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. பண்டையத் தமிழகத்தில் இன்றைய கேரளமும் (சேரநாடு) அடங்கும். இந்தியத் திருநாடு வடக்கே இயமத்தையும், தெற்கே இந்தியப் பெருங்கடலையும், கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே அரபிக்கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. பண்டையத் தமிழகம் வடக்கே வேங்கடத்தையும் (திருப்பதி), தெற்கே தென்கடலையும் (குமரிக்கடல்), கிழக்கே குண கடலையும் (வங்கக்கடல்), மேற்கே குட கடலையும் (அரபிக்கடல்) எல்லைகளாகக் கொண்டு மாபெரும் இயற்கை வளம் பொருந்திய நெடும்பரப்பாக விளங்கியது. கிழக்குத் தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழகத்தை வளப்படுத்தின. இம்மலைகளில் இருந்து உருவான பாலியாறு (பாலாறு), பெண்ணையாறு (தென்பெண்ணை), காவிரி,

வைகை, தாமிரபரணி, சேயாறு (செய்யாறு), பேரியாறு உள்ளிட்ட பல ஆறுகள் தமிழகத்தை வளம் கொழிக்கச் செய்தன. இதனால் உற்பத்திப் பொருட்கள் பல்கிப் பெருகின. இவற்றை நில வழி நாடுகளுக்கும் கடல்வழி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தும், பிற நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்தும் வணிகத்தில் தமிழகம் சிறந்து விளங்கியது. கடல்வழியாக யவனர்களோடும் (இத்தாலி, ஜெர்மன்), அரேபியர்களோடும், மேற்குக் கடல்வழியாக வணிகம் செய்தனர். (அகம் 149 – 8:10) கிழக்குக் கடல் வழியாகக் காழகம் (கடாரம் – மலேசியா), சீனம், ஈழம் (இலங்கை), சாவகம் உள்ளிட்ட நாடுகளோடு வணிகம் செய்தனர். இவற்றைக் கடல்வழிப் பெருவணிகம் எனலாம். நில வழியாகத் தமிழர், பலமொழிப் பேசும் நாடுகளோடு தொடர்பில் இருந்தனர். இதனை அகநானூறு மொழிப்பெயர் தேயம் (அகம் 31, 127, 211, 295) என்றுரைக்கிறது. தமிழர் கருநாடகம், ஆந்திரம் வழியாக வடநாட்டினருடன் வணிக உறவை வைத்திருந்தனர். இமயமலை, கங்கை ஆறு, பாடலிபுத்திரம் போன்ற மலை, ஆறு, ஊர்களையும், நந்தர், மோரியர் போன்ற அரசர்களையும் அறிந்திருந்தனர். சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தானின் சிறப்புகளை எடுத்துரைக்கும் பட்டினப்பாலை என்னும் நூல், சோழ நாட்டிற்கு வந்து குவிந்த பொருட்களைப் பட்டியலிடும் அடிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை,

“நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி”

(பட்டினப்பாலை – 188 : 196)

இங்குக் கடல் கடந்து கப்பல்களில் வந்து இறங்கிய குதிரைகளையும், வடமலை (இமயம்) பிறந்த பொன், மணிகளும், கங்கை ஆற்றுப் படுக்கையில் விளைந்த பொருட்களும், ஈழம் (இலங்கை) நாட்டில் விளைந்த பொருட்களும், காழகம் (மலேசியா) உற்பத்தியான பொருட்களும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் வந்து சேர்ந்தன.

இங்கு வட இந்தியத் தொடர்பு முதன்மைப் பெறுவதால் அவற்றைப் பற்றி மட்டுமே ஆழ்ந்து ஆராயலாம்.

பட்டினப்பாலைக் கூற்றுப்படி இந்தியாவில் விளைந்த சிறந்த பொருட்களைப் பட்டியலிடுகிறது. மிளகு (கறி) மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும், தென்கடலில் (இந்தியப் பெருங்கடல் – பாண்டிய நாடு), முத்துக்களும், குணகடல் (வங்காள விரிகுடா), பவளம் (துகிர்), காவிரிப் படுக்கை விளைப்பொருட்கள் இவைத் தமிழகத்தில் (தென்இந்தியா) விளைந்தவை. ஈழம் (இலங்கை), காழகம் (மலேசியா), இவை கடல் கடந்த நாடுகளின் பொருட்கள் வடநாட்டில்

(இன்றைய வட இந்தியா) இருந்து அதாவது வடமலை — இமயமலையில் பிறந்த மணியும், பொன்னும், கங்கை ஆற்றுப்படுக்கையில் உருவான விளை பொருட்களும் சோழ நாட்டில் வந்து குவிந்ததைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் பதிவுச் செய்கிறார்.

எனவே வட நாட்டினருக்கும், தென் நாட்டினருக்கும் சிறந்த முறையில் வணிகத் தொடர்பு இருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது. தமிழக வரலாற்றை நாம் எழுதும் போது மாமூலனார் பாடலுக்கு முக்கியத்துவம் தர வேண்டியுள்ளது. இவர் தம் இரண்டு பாடல்களில் நந்தர் — மோரியர் — கங்கை — பாடலி ஆகிய வரலாற்றுக் குறிப்புகளைத் தருகிறார்.

பாடலி நகரில் "செல்வம்" மிகுந்திருந்ததை அகநானூற்றுப் பாடல்கள் வழி மாமூலனார் பாடல்கள் சான்று பகர்கின்றன. நந்தர் என்னும் அரசர் குடியினர் பாடலி நகரத்தை அரசாண்டனர். நந்தர்களால் ஈட்டப்பட்ட பெரும் செல்வத்தை மாற்றார் படையெடுப்பினால் அழியா வண்ணம் நந்த அரசன் ஒருவன் கங்கை ஆற்றின் அடியில் மறைத்து வைத்த செய்தியை,

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ"

(அகம் – 265 : 4-6)

என்னும் பாடலடிகள் உறுதி செய்கின்றன. மேலும் அகநானூற்று 251 ஆம் பாடலும் நந்தர்கள் பெரும் பொருள் வைத்திருந்தை உறுதி செய்கிறது. மேலும் இப்பாடல்,

"தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியாமையினர் பகைதலை வந்த
மாகெழுதானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவளை எருவிய அறைவா யும்பர்" — அகம் 251

வம்ப மோரியர் அதாவது புதியவரான மோரியர் என்ற அரசு தமிழகத்தின் மேல் படையெடுத்ததை இப்பாடல் பதிவு செய்கிறது. மாபெரும் படைகளோடு தேர்கள் செல்ல பாறைகளைக் குடைந்து வழியாக்கித் தமிழகத்திற்குள் நுழைய முற்பட்டுள்ளனர். இப்போரில் மோரியர் வென்றதற்கான குறிப்புகள் இல்லை. மோரியர் என்பவர் மௌரியர் ஆவர். இந்தியாவையே தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த அசோகச் சக்கரவர்த்தியின் முன்னோர் படையெடுத்தும் தமிழகத்திற்குள் நுழைய முடியவில்லை. ஆனால் வடநாட்டில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தால் அசோகரின் தந்தை சந்திரகுப்த மௌரியன் கருநாடகத்திற்கு வந்து சமண சமயத்தைப் பரப்பியது குறிப்பிடத்தக்கது. பின்னர் அவர்கள் தமிழகத்திற்குள்ளும் புலம்பெயர்ந்து குடியேறியது குறிப்பிடத்தக்கது.

**சோணை ஆறும் பாடலி ஊரும்**

வடநாட்டுத் தொடர்பைப் பற்றிக் குறுந்தொகைப் பாடலொன்றும் பேசுகிறது. இப்பாடலைப் படுமரத்து மோசிகீரனார் என்னும் புலவர் பாடியுள்ளார்.

“நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட்டி யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனைக் காதலர் வரவே”

(குறுந்தொகை – 75)

இப்பாடல் மிகப் பெரிய வரலாற்றுக் குறிப்பை நமக்கு முன் வைக்கிறது.

நெடுநாள் பிரிந்த தலைவன் (பொருள் பிரிவு), தலைவியைக் காண ஊர்த் திரும்புகிறான். தலைவன் வரும் முன் தலைவன் வரும் செய்தியைப் பாணன் தூதாகச் சென்று தலைவியிடம் கூறுகிறான். இதனைக் கேட்ட தலைவிக்கு ஏக மகிழ்ச்சி, பாணன் கூறியது உண்மை தானா? என்ற வினா எழுகிறது. பாணனை நோக்கி, தலைவன் வருகையை நீயே கண்டாயா? இல்லையென்றால் தலைவன் வருகையைப் பார்த்தவர்கள் சொல்ல கேட்டனையோ? அப்படியானால் யார்வாய்ச் சொல்ல நீ கேட்டாய் என் காதலன் (தலைவன்) வருகையை? என்று மிகுந்த விருப்புடன் பாணனை வினவுகிறாள். இறுதியாக மிகுந்த மகிழ்ச்சியுடைய செய்தியைக் கூறிய பாணனுக்குப் பரிசில் தர எண்ணுகிறாள் தலைவி. பாணனே நீ நீண்ட வெள்ளிய தந்தங்களுடன் விளங்கும் யானைகள் நிரம்பிய சோணை ஆற்றையும், பொன் மிக்கப் பாடலி ஊரையும் பெறுவாயாக என்று வாழ்த்துகிறாள்.

இராமாயணத்தில் கூனிக்கு முத்துமாலையைப் பரிசாக கைகேயி தந்தது போல் புகழ்மிக்க ஊரையும், ஆற்றையும் பரிசாக தருகிறாள் தலைவி. இங்கு ஊர், ஆறு என்பது நேரடிப் பரிசுப் பொருட்கள் அல்ல, நான் தரும் பரிசில் சிறிதாக இருந்தாலும் சோணை ஆறு, பாடலி ஊர் போன்ற புகழுடைய பொருட்களாக நீ கருதிக் கொள்ள வேண்டும் என்பது பொருள்.

மாமூலனார் பாடல், கங்கை ஆற்றங்கரையில் செல்வம் மிக்க பாடலி ஊர் இருந்ததாகக் கூறுகிறது. ஆனால் படுமரத்து மோசிகீரனார் பாடல் பொன் (தங்கம்) மிகுந்த பாடலி ஊர் என்று கூறுகிறது.

சமீபத்தில் உத்திரபிரதேச மாநிலத்தில் தங்கமலை ஒன்று கண்டறியப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. உத்திரபிரதேசத்தில் சோன்பத்ரா மாவட்டத்தில் உள்ள சோன் மலைப் பகுதியில் 3,300 டன் தங்கம் இருப்பதாக, உத்திரபிரதேச அரசு கூறியுள்ளது. ஆனால் இந்தியப் புவியியல் துறை 160 கிலோ தங்கம் மட்டுமே

மண்ணில் இருந்து பிரித்தெடுத்தால் கிடைக்கும் என்று கூறுகிறது. இம்மலையில் குறைந்த அளவோ, மிகுதியான அளவோ தங்கம் இருப்பது உறுதியாகிறது. சோன்பத்ராவில் உள்ள சோன் என்ற சொல் தங்கத்தைக் குறிக்கிறது.

உத்திரபிரதேச வழியாகவே சோன் ஆறும் (784 கி.மீ) பயணிப்பதால் சோன்பத்ரா மலையிலுள்ள பல நீரோடைகள் சோன் ஆற்றில் கலந்து தங்கத்துகள்கள் அடித்துவரப்பட்டிருக்கலாம். இந்த ஆறு பாடலி ஊருக்கு அருகே கங்கையாற்றில் கிளையாறாகக் கலக்கிறது.

சோன் ஆறு தன் இயல்பை இழந்து வேறொரு ஆறாக (கங்கை) மாறுகிறது. ஆகவே பாடலி சோணை ஆற்றங்கரையில் இல்லை, கங்கை கரையில் உள்ளது என்பதே சரியாகும். அப்படியானால் படுமரத்து மோசிகீரனார் சோணை ஆற்றைக் கூறக் காரணம் யாது? என்ற எண்ணம் எழுகிறது. ஆனால் பொன் மிக்குப் பாடலி ஊர் இருந்ததற்குக் காரணம் சோன்பத்ரா மலையும், சோன் ஆறும் என்று கருதலாம்.

அப்படியானால் சோணை ஆறு எது என்ற வினா எழுகிறது. இந்தியத் திருநாட்டின் வடகிழக்குப் பகுதியான அசாம் மாநிலத்தில் சோணை என்ற பெயரில் இன்றும் ஒரு ஆறு ஓடுகிறது. இது "பராக்" ஆற்றின் கிளை ஆறாகும். சோணை நகரம், சோணை ஆறு இரண்டும் இம்மாநிலத்தில் உள்ளன. அசாம் அடர்ந்த வனப்பகுதிகள் கொண்ட மாநிலம் என்பதால் காசிரங்கா தேசியப்பூங்கா இங்குள்ளது. யானைகள் மிகுந்த இந்தியப் பகுதிகளில் இதுவும் ஒன்று என்பதை, வணிகம் பொருட்டு வடகிழக்கு இந்தியாவிற்குச் (இதன் வழியாக சீனாவிற்கும் சென்றிருக்கலாம்) சென்ற தமிழர் சோணை ஆற்றையும் அதில் நீராடும் மிகுந்த யானைக் கூட்டத்தையும் அறிந்து பதிவுச் செய்துள்ளனர். இன்றைக்கும் இந்தியாவில் மிகுதியான யானைகள் உள்ள மாநிலங்களில் ஒன்று கருநாடகம், இரண்டாவது அசாம், மூன்றாவது கேரளம் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படியானால் தலைவி பாணனுக்கு, அவன் சொன்ன நற்செய்திக்காக இரண்டு பரிசில் தர முற்படுகிறாள். ஒனறு பொன் மலிந்த பாடலி. இரண்டு யானைகள் மிகுந்த சோணை ஆறு. இரண்டும் வளம் மிக்கவை. காலஞ்சென்ற பொறியாளர் தமிழ்க் கணக்கியலின் மாமேதை செங்கத்தைச் சேர்ந்த வளையாம்பட்டு கு. வெங்கடாசலம் அவர்கள் அசாம் மக்கள் பயன்படுத்தும் கணக்கியல் கூறுகள் தமிழர்கணக்குடன் ஒத்துப் போவன என்று தமது கட்டுரைகளில் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. வணிகத்திற்கு அடிப்படைக் கணிதம், எனவே தமிழ் வணிகர்கள் அசாம் பகுதிகளுக்கு வணிகம் பொருட்டுச் சென்று வந்துள்ளனர். அவர்கள் கண்ட சோணையாற்று யானைக் கூட்டத்தைப் பதிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் தென்பாடலி என்று கடலூர் வழங்கப்படுகிறது. ஆனால் கடலூரில் கடலில் கலக்கும் ஆறாகத் தென்பெண்ணை ஆறே உள்ளது. இதன் பெயர் "பெண்ணையாறு" என்று சங்க நூல்கள் கூறுவதால் தென்பெண்ணை ஆறு சோணை ஆறு இல்லை என்பது தெளிவு. ஆனால் திருவண்ணாமலைக்கு சோணைகிரி என்ற பெயருள்ளது. இது புராணப் பெயரே. திருவண்ணாமலையில் இருந்து திருக்கோவிலூர் அருகே தென்பெண்ணையாற்றில் கலக்கும் இரண்டு ஆறுகள் உள்ளன. இவற்றிற்குத் துறிஞ்சலாறு, ஓலைப்பாடி ஆறு என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவையும் யானைகள் மிக்க சோணை ஆறு அன்று.

### முடிவுரை

குறுந்தொகைப் பாடல் குறிப்பிடும் "பாடலி" ஊர் கங்கை கரையில் அமைந்த இன்றைய பாட்னாவே ஆகும். சோணையாறு என்பது அசாம் பகுதியில் ஓடும் ஆறே என்று கருத இடமுண்டு. இதன் மூலம் தமிழர் வணிகம் பொருட்டுக் கடல் கடந்து மட்டுமின்றி நிலவழிப் பயணமாக இந்தியா முழுமையும் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

### துணை நின்ற நூல்கள்


1. அகநானூறு, வேங்கடசாமி நாட்டார் ந.மு, வேங்கடாசலம் பிள்ளை. ரா , பதவுரை, விளக்கவுரை, கழக வெளியீடு, சென்னை, 2007
2. குறுந்தொகை, சோமசுந்தரனார் பொ.வே, உரை, கழக வெளியீடு, சென்னை, 2017
3. பத்துப்பாட்டு, சோமசுந்தரனார் பொ.வே, உரை, கழக வெளியீடு, சென்னை, 2017